அடையாள இலக்கம்

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2012

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition - Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

மேற்பிரிவு
(10-13) வயதுப் பிரிவு)

காலம்: பி.ப. 9.30 மணி, ஞயிற்றுக்கிழமை

நேரம் : 2:00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப்புள்ளிகள் | |

# <u>மேற்பிரிவு 2012</u>

(1). **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(5 புள்ளிகள்)

1. கடலுணவு ______________ + ______________
2. தமிழார்வம் ______________ + ______________
3. வேற்றினத்தவர் ______________ + ______________
4. குறளோவியம் ______________ + ______________
5. விழிப்புணர்வு ______________ + ______________

| புள்ளிகள் | |
|---|---|

(2). **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

(5 புள்ளிகள்)

1. காலை + கோயில் = ______________________
2. திரை + உலகம் = ______________________
3. செலவு + ஆயிற்று = ______________________
4. பல் + எல்லாம் = ______________________
5. சோறு + பானை = ______________________

| புள்ளிகள் | |
|---|---|

(3) **கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தேர்ந் தெடுத்து எழுதுக.**

(10 புள்ளிகள்)

1. வகுப்பறையின் ஒரு ____________________ இருக்கும் மரப்பேழையில் கதைப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

   (1) மூளையில் (2) மூலையில்

2. அந்த இருதயப் புற்று நோயாளி நேற்றிருந்ததைவிட இன்று ____________________ இருக்கிறார்.

   (1) களையுடன் (2) கலையுடன்

3. நம் நாட்டில் தானியம் ____________________ நிலங்கள் அதிகம் உண்டு.

   (1) விலையும் (2) விளையும்

4. குதிரையின் குதிக்காலில் ____________________ இருக்கிறது

   (1) குழம்பு (2) குளம்பு

5. தலைவர் தனது இடது ____________________ சால்வை அணிந்திருக்கிறார்.

   (1) தோளில் (2) தோலில்

6. பரதன் பயந்த ____________________ கொண்டவன்.

   (1) தன்மை (2) தண்மை

7. கண்ணன் புது ____________________ வாங்கினான்

   (1) மனை (2) மணை

8. மலை ____________________ சாதனை புரிபவர்கள் பலதுன்பங்களையும் எளிதாக எண்ணுவர்.

   (1) ஏரி (2) ஏறி

9. __________________________ கத்தியை நாம் எப்பொழுதும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்

(1) கூறிய (2) கூரிய

10. பண்டைக்காலத்தில் ____________________________ ஓலையில் எழுதிய நூல்களைப் பலர் அரும்பாடுபட்டு அச்சில் பதித்தனர்.

(1) பணை (2) பனை

| புள்ளிகள் | |
|---|---|

(4) **வாக்கியங்களை நிறைவு செய்க.**

(10 புள்ளிகள்)

1. தமிழ்மொழியில் தோன்றியுள்ள நீதி ____________________ திருக்குறளே தலைசிறந்தது.

2. கண்தெரியாத குருடனுக்கு அவன் வைத்திருக்கும் ______________________ பெரும் உதவியாக இருக்கிறது.

3. ஒரு சிலர் புகைப்பிடிக்கும் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகி, அவர்கள் அதை ______________________ தவிக்கிறார்கள்.

4. எனக்குத் தமிழ்மொழி ______________________ பிரஞ்சு ஆங்கில மொழிகளும் தெரியும்.

5. திருடுவதையே தொழிலாகச் செய்துவந்த உதயன் இப்பொழுது _________________________ நல்லவனாக வாழ்கிறான்.

6. மாணவர்கள் காற்பந்து _____________________ திடலுக்குள் புகுந்துவிட்ட ஒரு நாய் வழி தெரியாமல் சில நிமிடம் அங்குமிங்கும் ஓடி அலைந்தது.

7. நமது உடலின் முக்கியமான ______________________ தலை ஆகும்.

8. மகாகவி காளிதாசன் சமஸ்கிருத __________________________ தன் காவியங்களைப் படைத்தார்.

9. கடுமையான _________________________ ஒருவர் வாழ்க்கையில் முன்னேற இயலும்.

10. நாம் நமக்குச் சொந்தமில்லாத பொருளை அதற்கு __________________ சேர்த்துவிட வேண்டும்.

| புள்ளிகள் | |
|---|---|

(5) **கீழ்க்காணும் பகுதியில் 1 முதல் 10 வரையுள்ள இடங்களை நிரப்பு வதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப் படுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.**

(20 புள்ளிகள்)

ஆதிரை, தொடக்கப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவி. அவள் ஒரு நாள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக (1)______________________ அனைத்துப் பள்ளி விவாதப் போட்டியைக் காணச் சென்றாள். அது போட்டியின் இறுதி (2) ____________________ அந்தப் போட்டியில் இரண்டு புகழ்பெற்ற பள்ளிகள் (3) ________________________ ஒவ்வொரு குழுவிலும் நான்கு பேச்சாளர்கள் இருந்தனர்.

தலைவர் முதலில் பேச்சாளர்களை அறிமுகப்படுத்தினார். (4) ____________________ விவாதப் போட்டி தொடங்கியது. பேச்சாளர்கள் மிகவும் காரசாரமாகப் பேசித் தம் கருத்துக்களை (5) ____________________போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வை யாளர்கள் (6) _____________________ வசப்பட்டுச் சில இடங்களில்

கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். போட்டியில் பேசிய அனைவரிடமும் மொழியாற்றல் (7) ______________________ பொது அறிவும் நிரம்பி இருந்ததை உணர முடிந்தது. அவர்கள் பல போட்டிகளில் பங்குபெற்ற (8) ______________________ உடையவர்கள் என்பதை அவர்களின் பேச்சு புலப்படுத்தியது. போட்டி முடிவுற்ற போது மழை பெய்து (9) ______________________ போல் அரங்கம் அமைதியாக இருந்தது.

போட்டி (10) ______________________ ஆதிரை வீடு திரும்பினாள். அவள் தானும் ஒரு சிறந்த பேச்சாளராக வர வேண்டும் என்று மனதில் உறுதி கொண்டாள்.

1. அறிவு 2. நடைபெற்ற 3. அனுபவம் 4. ஓய்ந்தது 5. சேர்ந்து

6. பங்கெடுத்தன 7. நின்று 8. மட்டுமன்றி 9. முடிந்து 10.சுற்றாகும்

11. அதனால் 12. பின்னர் 13. அடங்கியது 14. உணர்ச்சி

15. எடுத்துரைத்தனர்

| புள்ளிகள் | |
|---|---|

## பகுதி 2

(6) **இக் கவிதையைப் படித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(20 புள்ளிகள்)

எருது நான்கு ஒன்று கூடி
ஒற்றுமையாய் மேய்ந்தன
பருத்து வளர்ந்த உடலினோடு
பலம் மிகுத்துத் திரிந்தன

கூட்டமாகச் செல்லும் எருதைச்
சிங்கமொன்று கண்டது
வேட்டை ஆடி அவற்றை உண்ண
விசமப் புத்தி கொண்டது

சிங்கம் சொன்ன செய்தியாலே
சினத்தோடெருது பிரிந்தன
பொங்கும் உவகையோடு சிங்கம்
புசித்துப் பசியைத் தீர்த்தது

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே
ஒருமை நீங்கில் தாழ்வுதான்
என்று தேர்ந்தே ஒன்று சேர்ந்தோர்
இனிதாய் என்றும் வாழ்வரே

1. ஒற்றுமையாக மேய்ந்து கொண்டிருந்த விலங்குகள் எவை?

___

2. விசமப் புத்தி யாருக்கு ஏற்பட்டது?

___

3. எருதுகள் ஏன் பிரிந்தன?

___

4. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக?

___

5. இக்கதை உமக்குத் தரும் செய்தி என்ன?”

___

| புள்ளிகள் | |
|---|---|

(7) **கீழேயுள்ள படத்தையும் உதவிச் சொற்களையும் பயன்படுத்தி 120 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

(30 புள்ளிகள்)




1. பேருந்து நிற்குமிடம் 2. மோதியது 3. பயணிகள்
4. காயமடைந்தனர், 5. வழிப்போக்கர் 6.காப்பாற்றினர்
7. சிகிச்சை அளித்தனர் 8. தெரியப்படுத்தினர் 9. முதலுதவி வண்டி
10. விபத்து மற்றும் அவசரப் பிரிவு.

| புள்ளிகள் | |
|---|---|